**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், அவர்கள் நிறைய விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு முடியாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதை வலியுறுத்தினோம், அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அனைவருக்கும் இலவச மின்சாரம் தர முடியாது என்று சொன்னதை கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று பேச முயன்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புக்கான காரணத்தை துரைமுருகன் முதலில் சொன்னது கரெக்ட். (குறுக்கீடுகள்) அரசுக்கு உள்நோக்கம் கற்பிப்பது, அவற்றையெல்லாம் நான் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, என்ன சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் தொடர்ந்து... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நான் பேசியது..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் தொடர்ந்து வந்த இலவச மின்சாரம் தமிழ்நாட்டில் உள்ள எல்லா விவசாயிகளுக்கும் பயன்பட வேண்டுமென்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை நிராகரித்த காரணத்தினால் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வெளிநடப்புச் செய்கிறோம். (குறுக்கீடுகள்)

## 4. அறிவிப்பு

### மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு ஒரு சட்டமன்றப்

2003 நவம்பர் 4] [பேரவைத் தலைவர்]

பேரவை உறுப்பினரையும், திருவள்ளுவர் பல்கலைக் கழக கல்விக் குழுவிற்கு இரு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென கோரிக்கைகள் வரப்பெற்றன.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரது பதவிக் காலம் 6-5-2006 வரை ஆகும். (குறுக்கீடுகள்)

திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும். (குறுக்கீடுகள்)

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

நியமனத் தாள் வேண்டுவோர் சட்டமன்றப் பேரவைச் செயலக செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புமனுத் தாக்கல் செய்ய கடைசி நாள் 5-11-2003 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி. வேட்புமனுக்கள் பரிசீலனை, 6-11-2003 முற்பகல் 11.00 மணி, வியாழக்கிழமை. வேட்புமனுக்கள் திரும்பப்பெறுதல், 6-11-2003 பிற்பகல் 3.00 மணி, வியாழக்கிழமை. தேர்தல் நாள் (தேவையிருப்பின்), 7-11-2003, வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. (குறுக்கீடுகள்)

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர அரசே கட்டணத்தை ஏற்பது—தொடர்ச்சி

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) முதலில் விளக்கத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் விளக்கத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) விளக்கத்தை முதலில் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) துரைமுருகன் அரசாங்கம்